Registered as a News Paper   பக்கங்கள்: 04   விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM   Peoples Daily   மக்கள் தினசரி

நாதம்: 02   திருவள்ளுவர் ஆண்டு 2022   மார்கழி 21   (05-01-1992)   ஞாயிற்றுக்கிழமை   ஓசை: 321

## பயிற்சி முடிந்த ஆசிரியர் தீவகத்திற்கு மாற்றம்

(யாழ்ப்பாணம்)

1991 ஆம் வருட இறுதியில் ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளில் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த ஆசிரியர்கள் சிலர் நயினாதீவு, நெடுந்தீவு, அனலை தீவுப் பாடசாலைகளுக்கு 1-1-92 முதல் மாற்றப் பட்டுள்ளார்கள்.

நெடுந்தீவு சைவப் பிரகாச வித்தியாலயம், நயினாதீவு சிறிகணேச வித்தியாலயம், நயினாதீவு ம. வி; நயினாதீவு சிறி நாகபூஷணி வித்தியாலயம், ஆகிய பாடசாலைகளுக்கே (3ஆம் பக்கம் பார்க்க)

# இனப்பிரச்சினை தீரவேண்டுமானால் புலிகளுடன் பேசியே ஆகவேண்டும்

## இராணுவ வெற்றி தீர்வுகாணாது கிறிஸ்தவ தலைவர் சோமாபெரேரா

நாட்டுக்கு சமாதானம் அவசியத் தேவை என்பதையும் சமாதானம் ஏற்பட புலிகளுடன் பேச வேண்டும் என்பதையும் எல்லோரும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். இவ்வாறு அண்மையில் யாழ்ப்பாணம் வந்து திரும்பியவரும், மெதடிஸ்த திருச்சபையின் முன்னாள் தலைவரும், நீதிக்கும் சமாதானத்துக்குமான தேசிய கிறிஸ்தவ கவுன்சிலின் தலைவருமான சோமா பெரேரா கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் நாங்கள் ஒரு தீர்வைக் காணா விட்டால் அதனால் அனைவருமே துன்பப்படவேண்டி வரும். எனவே சமாதானத்திற்கான பாதையை விட்டுக் கொடுப்புகளினூடாகத் தொடங்கவும் வேண்டும். அத்துடன் போராடும் சக்திகளுடன் பேசவும் வேண்டும். அதைவிடுத்து அவர்களை கொலைகாரர், பயங்கரவாதிகள் என்று வர்ணித்து அவர்களுடன் பேசமுடியாது என்று கூறிக்கொண்டிருப்போமேயானால் பேச்சுவார்த்தைகள் எவையும் தொடங்கப்பட முடியாத நிலை ஏற்படும். மேலும் இராணுவநடவடிக்கைகளைத் தொடர்வதன்மூலம் இராணுவ வெற்றியை சிலவேளை பெறக்கூடும். ஆனால் இராணுவத்தீர்வு காணப்பட முடி ( 4ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகளை கெடுப்பவர் இனத்துவேசிகள்

### -தொண்டமான்

(கொழும்பு)

''அழிவைத் தடுத்து சமாதான முயற்சியை மேற்கொள்ளும் எனது இப்பணியை ஒரு சிலர் நிறுத்தப்பார்க்கின்றனர். அவர்கள்தான் இனத்துவேஷ வாதிகள். இவர்கள் கட்சிக்குள் இருந்துகொண்டே எனது சமாதானப் பணியை எதிர்க்கின்றனர்.

இவ்வாறுஇ.தொ.கா.தலைவரும், கிராமியதொழிற்துறை அமைச்சருமானஎஸ்.தொண்டமான் நுவரேலியாவில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையில் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்

இந்நாட்டில் சாந்தி, சமாதானம் நிலவ வேண்டுமாயின் முதலில் வட - கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படல் வேண்டும். இல்லையேல் ஆயிரக்கணக்கானோர் இறந்தும், கை, கால்களை இழக்கவும் நேரிடும்.

மேலும் எந்த இனத்தையும் பலி கொடுத்து வாழக்கூடாது எனவும் தெரிவித்தார்.

## 21 ஆம் திகதியின் பின்பே யாழ். வரத் தீர்மானம்

எனது யாழ்ப்பாணப் பயணம் இரத்துச்செய்யப்படவில்லை, பின்போடப்பட்டுள்ளதெனவும் அமைச்சர்தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கான பாராளுமன்றத் தெரிவுக்குழு (4 ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டா முயற்சியை கைவிட வில்லையாம்

சிங்கள இனவாதிகளால் அமைச்சர் தொண்டமானின் நல்லெண்ண சமாதான திட்டம் சிறிது ஆட்டம் கண்டுள்ளது என்று லண்டன் பி.பி.சி (4 ஆம் பக்கம் பார்க்க)

## இருநூறு தமிழ் இளைஞர் வழக்கைத் தாக்கல் செய்க

### பிரேமதாசாவிடம் கோரிக்கை

(கொழும்பு)

புதிய மகசீன் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் சுமார் இருநூறு தமிழ் இளைஞர்கள் மீதான வழக்குகளையும் ஜயலத் குழுவிற்கு முன்பாகத் தாக்கல் செய்யும்படி மனித உரிமைகளுக்கான ஜனாதிபதி பிரேமதாசாவிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கும், சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையே மீண்டும் போர் மூண்டபின்னர், யாழ்ப்பாணம் பகுதிகள் மற்றும்பெருந்தோட்டப் பகுதிகளில் இருநூறுக்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## படுவான்கரையில் மோதல்; 2 படை, 3 ரெலோ பலி

# இராணுவ வெற்றி தீர்வுகாணாது
## கிறிஸ்தவ தலைவர் சோமாபெரேரா

**நாட்டுக்கு சமாதானம் அவசியத் தேவை என்பதையும் சமாதானம் ஏற்பட புலிகளுடன் பேச வேண்டும் என்பதையும் எல்லோரும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். இவ்வாறு அண்மையில் யாழ்ப்பாணம் வந்து திரும்பியவரும், மெதடிஸ்த திருச்சபையின் முன்னாள் தலைவரும், நீதிக்கும் சமாதானத்துக்குமான தேசிய கிறிஸ்தவ கவுன்சிலின் தலைவருமான சோமா பெரேரா கூறியுள்ளார்.**

அவர் மேலும் கூறுகையில் நாங்கள் ஒரு தீர்வைக் காணாவிட்டால் அதனால் அனைவருமே துன்பப்படவேண்டி வரும். எனவே சமாதானத்திற்கான பாதையை விட்டுக் கொடுப்புகளினூடாகத் தொடங்கவும் வேண்டும். அத்துடன் போராடும் சக்திகளுடன் பேசவும் வேண்டும். அதைவிடுத்து அவர்களை கொலைகாரர், பயங்கரவாதிகள் என்று வர்ணித்து அவர்களுடன் பேசமுடியாது என்று கூறிக்கொண்டிருப்போமேயானால் பேச்சுவார்த்தைகள் எவையும் தொடங்கப்பட முடியாத நிலை ஏற்படும். மேலும் இராணுவநடவடிக்கைகளைத் தொடர்வதன்மூலம் இராணுவ வெற்றியை சிலவேளை பெறக்கூடும். ஆனால் இராணுவத்தீர்வு காணப்பட முடி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# இருநூறு தமிழ் இளைஞர் வழக்கைத் தாக்கல் செய்க
## பிரேமதாசாவிடம் கோரிக்கை

(கொழும்பு)

புதிய மகசீன் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் சுமார் இருநூறு தமிழ் இளைஞர்கள் மீதான வழக்குகளையும் ஜயலத் குழுவிற்கு முன்பாகத் தாக்கல் செய்யும்படி மனித உரிமைகளுக்கான பாரா்ளுமன்றக்குழு சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கும், சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையே மீண்டும் போர் மூண்டபின்னர், யாழ்ப்பாணம் மன்னார், கிழக்கு மாகாணப் பகுதிகள் மற்றும்பெருந்தோட்டப் பகுதிகளில் இருநூறுக்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(3 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுடன் தொடர்பு?
## சீக்கிய தலைவர் அறிவிப்பு

விடுதலைப் புலிகள் உட்பட இந்தியாவிலுள்ள தீவிரவாத இயக்கங்களுடன் சீக்கிய தீவிரவாதிகள் தொடர்பு வைத்திருப்பதாக பலம் வாய்ந்த அகாலிதள் என்ற சீக்கிய அமைப்பின் தலைவர் சிம்ரஞ்சித் சிங்மான், தெரிவித்தார்.

பொது நோக்குடன் ஏனைய தீவிரவாத அமைப்புகளுடன் இணைந்து புதிய இந்தியாவிற்கான சமஷ்டிமுன்னணிஒன்றை உருவாக்குவதற்கான ஒரு ஒன்றியத்தை அமைக்கப் போவதாகவும் தெரிவித்தார்.

பஞ்சாப்பின் தலைநகரான சண்டிகாரில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே சிம்ரஞ்சித்சிங்மான் இவ்வாறு தெரிவித்தார்.

(3 ஆம் பக்கம் பார்க்க)

# மருத்துவ பீட இடமாற்றம்; திட்டமிட்ட ஒடுக்குமுறை
## பல்கலை. மாணவர் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்கு வெளியேயாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தை மாற்றுவதென்பது சிறிலங்கா அரசின் திட்டமிட்ட இனஒதுக்கல் நடவடிக்கையாகும் என்று யாழ் பல்கலைக்கழக மாணவரவையும் மருத்துவபீட ஒன்றியமும் இணைந்து ஒரு கண்டன அறிக்கையை வெளியிட்டுள்ளன.

அக்கண்டன அறிக்கையில் மருத்துவபீட மாணவர்கள் பலர் இங்கு நாம் கல்வி கற்பதற்கு வசதிகள் இல்லையெனக் கூறி வேறு பல்கலைக்கழகங்களுக்கு இடமாற்றம் கோருவதாலும் யாழ் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் விரிவுரையாளர்கள் பற்றாக்குறை உள்ளதென்றும்

(3 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான முயற்சிகளை கெடுப்பவர் இனத்துவேசிகள்
## -தொண்டமான்

(கொழும்பு)

''அழிவைத் தடுத்து சமாதான முயற்சியை மேற்கொள்ளும் எனது இப்பணியை ஒரு சிலர் நிறுத்தப்பார்க்கின்றனர். அவர்கள்தான் இனத்துவேஷவாதிகள். இவர்கள் கட்சிக்குள் இருந்துகொண்டே எனது சமாதானப் பணியை எதிர்க்கின்றனர்.

இவ்வாறுஇ.தொ.கா.தலைவரும், கிராமியதொழிற்துறை அமைச்சருமானஎஸ்.தொண்டமான் நுவரேலியாவில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையில் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்

இந்நாட்டில் சாந்தி, சமாதானம் நிலவ வேண்டுமாயின் முதலில் வட-கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படல் வேண்டும். இல்லையேல் ஆயிரக்கணக்கானோர் இறந்தும், கை, கால்களை இழக்கவும் நேரிடும்.

மேலும் எந்த இனத்தையும் பலி கொடுத்து வாழக்கூடாது எனவும் தெரிவித்தார்.

## 21 ஆம் திகதியின் பின்பே யாழ். வரத் தீர்மானம்

எனது யாழ்ப்பாணப் பயணம் இரத்துச்செய்யப்படவில்லை, பின்போடப்பட்டுள்ளதெனவும் அமைச்சர்தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கான பாராளுமன்றத் தெரிவுக்குழு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டா முயற்சியை கைவிட வில்லையாம்

சிங்கள இனவாதிகளால் அமைச்சர் தொண்டமானின் நல்லெண்ண சமாதான திட்டம் சிறிது ஆட்டம் கண்டுள்ளது என்று லண்டன் பி.பி.சி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# படுவான்கரையில் மோதல்; 2 படை, 3 ரெலோ பலி

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப்புலிகளை இருவழியாக மடக்க முற்பட்ட சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் இருபடையினரும் மூன்று ரெலோ உறுப்பினர்களும் விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டதுடன் சில ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

## ஆயுதங்கள் மீட்பு

புலிகள் தரப்பில் ஒருவர் வீரச்சாவடைந்தார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு
### மேஜர் வினோத், லெப். சக்தி, நவா, சூரி, மகேஸ்

நேற்று முன்தினம் படுவான்கரைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சிலாவத்தை, தண்ணீரூற்று; விமானக் குண்டு வீச்சு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் சிலாவத்தைப்பகுதியிலும் தண்ணீரூற்றுப் பகுதியிலும் சிறிலங்கா விமானப்படை விமானங்கள் இரண்டு குண்டு வீச்சுத் தக்குதல்களை நடத்தியுள்ளன. தண்ணீரூற்றுப் பகுதியில் இக் குண்டு வீச்சுக்களினால்அனுஷியா (17வயது) என்னும் பெண் ஒருவர் கொல்லப்பட்டதுடன் நான்கு வீடுகளும் பலத்த சேதமடைந்துள்ளன.

# "விளம்பரம் எதுவுமின்றி யாழ். நகரைப் பிடிப்போம்"

முன்'விளம்பரம் எதுவும் இல்லாமலேயே யாழ்ப்பாணத்தை நோக்கி படையினர் நடை போடுவர். ஆனால்அதுஇப்போதைக்கு இல்லை. அது ஒரு அதிர்ச்சி வைத்தியமாகவே அமையும்'

இவ்வாறு பாதுகாப்பு படையினரின் நடவடிக்கைக்கு பொறுப்பான உயர் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கெதிரான முழுமையான நடவடிக்கையை இராணுவம் நினைத்தால் முழு கனரக வாகனங்கள் சகிதம் ஆரம்பிக்க முடியும். ஆனால் இதனால் அப்பாவி பொதுமக்கள் தான் பாதிக்கப்படுவார்கள்.

ஆகவே இதன் காரணமாக மனித உரிமைக் குரல்கள் ஒலிக்கும். பின்னர் சர்வதேசரீதியில் கண்டனக் குரல்கள் பிறக்கும். இதனால் தான் எம்துநடவடிக்கைகளை திட்டமிட்டு அவதானமாக செய்யவேண்டியுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

## "A" Level
## பௌதிகவியல் 93 Batch

ஆசிரியர்! N. பத்மநாதன் B.Sc Hons, Dip Ed

சந்தையடி ஒழுங்கை, மானிப்பாய்
சனி - ஞாயிறு 4 P.M.

நாகலிங்கம்கல்விநிலையம், திருநெல்வேலி
சனி, ஞாயிறு 10.30 A. M. (2072)



## 6-ம் வருடநினைவுதினம்
### செ. தேவதாசன் (அரியம்)

(சுங்க இலாகா யாழ்ப்பாணம்)

மலர்வு.- 29-04-1947 உதிர்வு:- 05-01-1986

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக 06-01-1992 காலை 6.15 மணியளவில் புனித ஆரோக்கிய நாதர் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்
தாய், மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்
38, புதிய வீடமைப்புத்திட்டம்,
குருநகர், யாழ்ப்பாணம். (2073)


## "நூற்று எண்பதாம் நாள் போற்றும் உன் புகழ்"



# வாஷிங்டன் பேச்சை பி. எல். ஓ. பகிஷ்கரிக்கும்

(ரியூஸிஸ்)

வாஷிங்டனில் அடுத்து நடைபெறவிருக்கும் சமாதானப் பேச்சு வார்த்தைகளைப் பகிஷ்கரிப்பது என பாலஸ்தீன விடுதலை இயக்கம் முடிவு செய்துள்ளது

இஸ்ரேல் அண்மையில் பன்னிரண்டு பாலஸ்தீனியர்களை நாடுகடத்தியுள்ளமைக்கு ஆட்சேபம் தெரிவித்தே பாலஸ்தீன விடுதலை இயக்கம் இம் முடிவை மேற்கொண்டிருப்பதாகத் தெரிவித்துள்ளது.

மேலும் இஸ்ரேலியர் கைப்பற்றியுள்ள பிரதேசங்கள் பற்றி ஜோர்தானில் இஸ்ரேலுக்கும், ஜோர்தானுக்குமிடையே நடைபெறும் பேச்சுக்களிலும் பாலஸ்தீன விடுதலை இயக்கம் பங்கேற்க மாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## பவுண் விலை குறைப்பு

எமது ஸ்தாபனத்தில் 4-1-1992 முதல் விலைப்பட்டியலில் பவுண் விலை குறைக்கப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

| | | |
|---|---|---|
| தரம் | 22 கரட் | 5300 ரூபா |
| தரம் | 21 கரட் | 5000 ரூபா |
| தரம் | 20 கரட் | 4800 ரூபா |
| தரம் | 18 கரட் | 4400 ரூபா |

### தமிழ்ப்பரிதி நகை மாடம்

இல. 15, புதிய சந்தை.
சாவகச்சேரி.

(சி 2071)


## அறிவித்தல்

யாழ். மத்திய சந்தைப்பகுதியில் இடங்கொண்டிருக்கும் ஞானவைரவர் கோவில் திருவிழாவை முன்னிட்டு எதிர்வரும் 14.01.92 முதல் 06.02.92 வரையுள்ள காலப்பகுதியில் மேற்படி ஆலய முன்வீதி (ஆஸ்பத்திரி வீதி - சீ. பொன்னம்பலம் வீதி (ராணி படமாளிகை முன்பாகவுள்ள வீதி) வாகனப் போக்குவரத்திற்கு முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
(03.01.1992)

(சி/3738)

## 45வது நாள் நினைவலைகள்

# பாடசாலை தவணைகள் ஆரம்ப திகதிகள்

(கொழும்பு)

கல்வி அமைச்சு உத்தியோக பூர்வமாக வெளியிட்டுள்ள 1992 ஆம்ஆண்டிற்கான தமிழ் பாடசாலை தவணைகள் நாட்காட்டி வருமாறு:

முதலாம் தவணை:-ஜனவரி 2 முதல் ஏப்பிரல் 3 வரை

இரண்டாம்தவணை:- மே 4 முதல் ஜூலை 31 வரை

மூன்றாம் தவணை:-ஆகஸ்ட் 31 முதல் டிசம்பர் 1 வரை.

யாழ் மாவட்டப் பாடசாலைகளில் முதலாம் தவணை ஆரம்பம் குறித்து முன் கூட்டியே திட்டவட்டமாகத் திகதி அறிவிக்கப்படவில்லை. யாழ் மாவட்டப் பாடசாலைகள் முதலாம்தவணைக்காகநாளை 6 ஆம் திகதி ஆரம்பமாகின்றன.


## வரி விளம்பரம்
### ENGLISH CLASSFS

English Literature For GCE A/L 92/93 & General English W th Grammar For GCE A/L & O/L Students From 12 th January. V. Kovinthapillai 62, Palam Road, Kantharmadam (2069)



## மரண அறிவித்தல்
### நீக்கிலாப்பிள்ளை பேதுறுப்பிள்ளை

சில்லாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட நீக்கிலாப்பிள்ளை பேதுறுப்பிள்ளை காலமாகி விட்டார். இவர் முன்னாள் நானாட்டான் பிரபல வர்த்தகர் ஆவார். இவர் காலஞ்சென்ற மேரிப்பிள்ளையின் அன்புக் கணவரும் மேரி மாகிறேற் (தங்கப் பொன்) சூசைப்பிள்ளை (நல்லாயன் பேக்கரி நானாட்டான்) காலஞ்சென்ற மேரி பிலோமினாராணி ஆகியோரின் அன்புத் தந்தையும் சூ. மரியாம்பிள்ளை (இளைப்பாறிய விவசாய திணைக்கள உத்தியோகஸ்தர் பாண்டியன் குளம்) செபஸ்தியாம்பிள்ளை (உஷா விற்பனையாளர் யாழ்ப்பாணம்) பேனடேற் சித்ரா ஆகியோரின் மாமனாரும் தனம் (உஷா விற்பனையாளர் பண்டத்தரிப்பு) தனேசன் (விவசாயத் திணைக்களம் பாண்டியன் குளம்) தருளசெறின், அன்ரோனயினஸ், றொசான், றொசாந்தி, றொகான், றொகாந்தி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 5-1-92 ஞாயிறு (இன்று) பிற்பகல் 3 மணிக்கு அன்னாரது இல்லத்தில் இருந்து நல்லடக்கத்திற்காக சில்லாலை கதிரைமாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்

(2074) பேரன் ம. தனம்



## நினைவு கூருகின்றோம்
## 1992 - 01 - 05

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் மன்னாரில் சிறிலங்கா இராணுவத்தால் கொலை செய்யப்பட்ட வண. பிதா

மேரி - பஸ்ரியன் அடிகளார்

1986 ஆம் ஆண்டு சித்தாண்டியில் சிறிலங்காப் படையினரின் சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

மூத்தவன் (வந்தாறுமூலை)

யாழ்ப்பாணத்தில் சிறிலங்காப் படையினர் 2 வது நாளாக மேற்கொண்ட தரை, வான் தாக்குதலில்

## "நூற்று எண்பதாம் நாள்
## போற்றும் உன் புகழ்"



**செல்வி பத்மசோதி சண்முகநாதபிள்ளை**
**(கப்டன் வானதி)**

வீரப்பிறப்பு
19-02-1964

வீரமறைப்பு
11-07-1991

மஞ்சள் கட்டியே மகிழும் கழுத்தினில்;
நஞ்சைக் கட்டியே நாடு காத்திடத்
துஞ்சி டாதுநீ துணிந்து சென்றனை
நெஞ்சு புகழுடன் வீரச் சாவினை
அஞ்சி டாதுமே ஆனை யிறவினில்
நெஞ்சில் துணிவுடன் ஏற்றுக் களத்தினில்
செஞ்சொற் கவிதையில் படைய லாகினாய்!
பொங்கும் உன்புகழ் புலரும் ஈழத்தில்;
ஆறு மாதங்கள் ஆகிப் போயினும்
வேறு வேறாயுன் விளங்கு "சோதியில்"
பேறு பெற்றமா வீரர் குடும்பமாய்
ஏறு போல்நடை ஏற்று நடக்கிறோம்.
முத்துப் பல்முழ கூட்டும் உன்முகம்
நித்தம் என்மகம் நிறைத்து நிலைத்ததே!

174, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.
(2070)

குடும்பத்தினர்.

---

தமிழ்ப்பதி நகை மாடம்

இல. 15, புதிய சந்தை.
சாவகச்சேரி.

(சி/2071)

---

## அறிவித்தல்

யாழ். மத்திய சந்தைப்பகுதியில் இடங் கொண்டிருக்கும் ஞானவைரவர் கோவில் திருவிழாவை முன்னிட்டு எதிர்வரும் 14.01.92 முதல் 06.02.92 வரையுள்ள காலப்பகுதியில் மேற்படி ஆலய முன்வீதி (ஆஸ்பத்திரி வீதி - சீ. பொன்னம்பலம் வீதி (ராணி படமாளிகை முன்பாகவுள்ள வீதி) வாகனப் போக்குவரத் திற்கு முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
(03.01.1992)

(சி/3738)

---

## 45வது நாள் நினைவலைகள்

வீர மண்ணில்
17-04-1974

வீரச்சாவு
22-11-1991



**வீரவேங்கை பெரியதம்பி**
**(தங்கவேல் தங்கேஸ்வரன்)**

சமரபாகு,
வல்வெட்டித்துறை.

தமிழினத்தின் விடிவுக்காக
மடிந்த பெரிய தம்பியே
உன் ஒளி என்றென்றும்
ஈழத்தில் அணையாது
நீ சென்ற பாதையில்
நாம் அணிதிரண்டு ஈழத்தை
காண்போம்
உன் கனவு நனவாகும்
விரைவில் தமிழ் ஈழம் மலரும்

அவரின் இல்லத்தில் இன்று 05 - 01 - 1992 இல் நடைபெறவிருக்கும் வீட்டுக்கிரியைகளில் உறவினர்களையும், நண்பர்களையும் கலந்து கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

(சி/3735) குடும்பத்தினர், நண்பர்கள்

---

சென்ற மேரி பிலோமினாராணி ஆகியோரின் அன்புத் தந்தையும் சூ. மரியாம்பிள்ளை (இளைப்பாறிய விவசாய திணைக்கள உத்தியோகஸ்தர் பாண்டியன் குளம்) செபஸ்தியாம்பிள்ளை (உஷா விற்பனையாளர் யாழ்ப்பாணம்) பேனடேற் சித்ரா ஆகியோரின் மாமனாரும் தனம் (உஷா விற்பனையாளர் பண்டத்தரிப்பு) தனேசன் (விவசாயத் திணைக்களம் பாண்டியன் குளம்) தருளசெறின், அன்ரோனயினஸ், றொசான், றொசாந்தி, றொகான், றொகாந்தி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 5-1-92 ஞாயிறு (இன்று) பிற்பகல் 3 மணிக்கு அன்னாரது இல்லத்தில் இருந்து நல்லடக்கத்திற்காக சில்லாலை கதிரைமாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்
(2074) பேரன் ம. தனம்

---

## நினைவு கூருகின்றோம்
## 1992 - 01 - 05

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் மன்னாரில் சிறிலங்கா இராணுவத்தால் கொலை செய்யப்பட்ட வண. பிதா

**மேரி - பஸ்ரியன் அடிகளார்**

1986 ஆம் ஆண்டு சித்தாண்டியில் சிறிலங்காப் படையினரின் சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**மூத்தவன்** (வந்தாறுமூலை)

யாழ்ப்பாணத்தில் சிறிலங்காப் படையினர் 2 வது நாளாக மேற்கொண்ட தரை, வான் தாக்குதலில் கொல்லப்பட்ட 9 பொதுமக்கள்.

1987 ஆம் ஆண்டு குரும்பசிட்டியில் சிறிலங்காப் படையினரின் உலங்குவானூர்தித் தாக்குதலில் வீரச்சாவெய்திய

**ராஜு** (சுப்பிரமணியம் கிருஸ்ணகுமார் - குரும்பசிட்டி)

1989 ஆம் ஆண்டு நாவற்குடாவில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய

**ஜீவன்**

திருக்கோணமலை ஈச்சிலம்பத்தைப்பகுதியில் தேச விரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்

1990 ஆம் ஆண்டு மாதகலில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**லோடர்** (வல்லிபுரம் நடேசபிள்ளை - தாவளை, இயற்றாளை)

1991 ஆம் ஆண்டு மட்டு. ஜெயந்திபுரத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய

**தேவா** (மரியான்சகாயம் - கல்லடி, மட்டக்களப்பு)

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்**

**விடுதலைப்புலிகள்**
**மக்கள் முன்னணி**

(சி-3737)

**சிந்தனைக்கு**

நேர்மையாளரின் செயல்கள் மட்டுமே, இனிது மணக்கும்; புழுதியிலும் மலரும்
— ஷெல்லி

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 05-01-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2208
த. பெ. எண் 05

# உலகை ஏமாற்றும் சமரசத் திட்டம்

அமைச்சர் தொண்டமானின் சமரசத் தீர்வுத்திட்டம் பற்றியும், யாழ்ப்பாண விஜயம் பற்றியும் நேரத்திற்கொரு செய்தி வெளிவந்துகொண்டிருக்கிறது. ஆரம்பத்தில் பொங்கலுடன் யாழ். செல்வேன் என அமைச்சர் தொண்டமான் அறிவித்தார். பௌத்த சிங்கள பேரினவாதத்தின் கூச்சல் அதிகரித்தது. இராணுவத்தின் யுத்த மிரட்டல்களும் வெளிவந்தன. பின்னர் தொண்டமானின் யாழ். விஜயம் மீள்பரிசீலனை செய்யப்படுகின்றது, ரத்துச்செய்யும் நிலையை அடைந்துவிட்டது என தொண்டமானை மேற்கோள் காட்டி பரித்திரிகைகள் தெரிவித்தன. பின்னர் யாழ். பயணம் கைவிடப்படவில்லை எனத் தொண்டமான் அறிவித்தார். இறுதியாக 21 ஆம் திகதிக்கு பின்னர் பயணம் குறித்து தீர்மானிக்கப்படும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் தொண்டமானின் அறிக்கைகளைப் பார்க்கும்போது தென்னிலங்கையில் ஏற்பட்ட எதிர்ப்பினால் குழம்பிப்போய் உள்ளார் என மக்கள் கருதலாம். ஆனால் உண்மை நிலை அவ்வாறில்லை. திரு. தொண்டமானும் குழம்பவில்லை. சிறிலங்கா அரசாங்கமும் குழம்பவில்லை தமிழ் மக்களையும், உலகத்தையும் குழப்பத்தில் ஆழ்த்துவதே திரு. தொண்டமானினதும், அரசாங்கத்தின் நோக்கமுமாகும்,

உலக செல்வந்த நாடுகள் அண்மைக்காலம் வரை மூன்றாம் உலக நாடுகளுக்கு வழங்கிய நிதி உதவிகளைப் பெரியளவில் குறைக்க திட்டமிட்டுள்ளன. கெடுபிடி யுத்தத்தின் பின்னர் தமது உதவி வழங்கல் கொள்கையை மீள்பரிசீலனை செய்துள்ள செல்வந்த நாடுகள் தமது தேவை, நலன் கருதி நிதிவளங்களை வேறு திசை நோக்கித் திருப்பியதால் மூன்றாம் உலகிற்கான உதவிகளை மட்டுப்படுத்தியுள்ளன. இதனை மறைத்து மூன்றாம் உலக நாடுகளின் மனித உரிமை மீறல்களையும், இராணுவச் செலவீடுகளையும் நிதி உதவியுடன் இணைத்துள்ளன.

சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் பெப்ரவரி முதல்வார முடிவில் பரிஸில் நடைபெறவுள்ளது. மனித உரிமைகள் மீறல்கள் இராணுவச் செலவீடு அதிகரிப்பு என்பன குறித்து சிறிலங்கா அரசாங்கம்மீது பெரும் குற்றச்சாட்டுகள் உள்ளன. இந்நிலையில் மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கை, சமாதானத்திற்கான மூன் முயற்சிகள் என்பனவற்றில் அரசாங்கம் தீவிர அக்கறை கொண்டுள்ளதாகக் காட்டிப் போதிய நிதி உதவி பெறும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

இதன் காரணமாக அமைச்சர் தொண்டமானின் தீர்வுதிட்டம் பற்றி அரசாங்கம் ஒரு குழப்பமான நிலையை திட்டமிட்டு உருவாக்கி வருகின்றது. திரு. தொண்டமான் சமாதான முயற்சியை மேற்கொள்ளாத அதேவேளை சமாதான முயற்சிகள் முறிவடையவில்லை தொடர்வதாக சர்வதேச உலகத்திடம் காட்ட அரசாங்கம் முற்பட்டுள்ளது. அதேவேளை சிங்கள மக்களிடம் தொண்டமானின் தீர்வுதிட்டத்தை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதையும் காட்ட முற்படுகின்றது.

**திரு. தொண்டமான் இ. தொ. காங்கிரஸ் சார்பில் தனது தீர்வுத்திட்டத்தை முன்வைத்திருப்பினும் உலக அரங்கில் அவர் ஒரு சிரேஷ்ட அமைச்சர், அமைச்சரவையின் கூட்டுப்பொறுப்பு அவருக்கும் உண்டு. இது ஒன்றே சிறிலங்கா அரசாங்கம் நன்மையடையப் போதுமானதாகும். ஆகையால் அமைச்சர் தொண்டமானின் யாழ். விஜயம் குறித்த இக் குழப்பமான நிலை பெப்ரவரி முதல் வாரம் வரையில் தொடர்ந்தும் நீடிக்கும். அதற்கு அப்பால் உருவாகும் நிலையே அரசியலின் போக்கை தீர்மானிக்க உதவும்.**

# பொறுப்பற்ற முறையில் மருந்துப் பொருள் பயன்பாடு

(யாழ்ப்பாணம்)

லாக்கெட்டில், ஸ்செலஸ்ரின் பெரனீஸ் என்ற பெயரிலுள்ள உள மருத்துவத்துறை மருந்துகளை யாழ்ப்பாணத்தில் சில மருந்துக்கடைகளில் சாதாரணமாகவே பணம் கொடுத்து வாங்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

சக்தியுள்ள இந்தரக மருந்து வகைகளை துறைசார்ந்த வைத்தியரின் ஆலோசனை இல்லாமல் உட்கொண்டால் பின்விளைவுகள் ஏற்படுவதோடு மருந்தே விஷமாக மாறிவிடுமென்று டாக்டர்கள் சொல்கிறார்கள். தற்போதைய நெருக்கடி நிலை காரணமாக பாதிப்படையும் சிலருக்கு இவ்வகை வீரியமுள்ள மருந்துகளைக் கடைசிப் பட்ச மருந்தாக சில உள்ளூர் வைத்தியர்கள் தயக்கமில்லாமல் எழுதித் தருகிறார்கள் என்றும் அதே வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்த மருந்துகளைச் சாப்பிட்டவர்கள் சிலர்கடுமையான பின்விளைவுகளால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

சாதாரண உளச் சுகவீனங்களுக்கு மேற்படி மருந்துவகைகளைப் பயன்படுத்தக் கூடாது என்றும் தகுதி வாய்ந்த டாக்டர்களின் சிட்டை இல்லாமல் விற்கக் கூடாது என்று எச்சரிக்கும் சட்டங்கள் உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இம்மாதம் நடுப்பகுதியில் எழுதுவினைஞர் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்டத்தில் எழுதுநர் தரங்களுக்கு அமைய அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைகள் இம்மாதம் நடுப்பகுதியில் நடைபெறும் என யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். சண்முகநாதன் தெரிவித்தார்.

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கடந்த ஒக்டோபர் மாதம் கோரப்பட்டிருந்தது தெரிந்ததே இப்பரீட்சைக்கு யாழ்மாவட்டத்தில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டோர் தோற்றவுள்ளனர். மேற்படி பரீட்சைக்கான வினாத்தாள்கள் அரசாங்க அதிபரால் எதிர்வரும் பத்தாம் திகதி இங்கு எடுத்து வரப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# தாண்டிக்குளத்தில் சிறைக்கூண்டு

(வவுனியா)

வவுனியா தாண்டிக்குளம் சிறிலங்கா இராணுவ சோதனை முகாம்பகுதியில் தமிழ்க் கைதிகளை அடைப்பதற்காக விசேட கூண்டு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்படுவோர் இக்கூண்டில் தற்காலிகமாக அடைத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகின்றனர்.

சந்தேகத்திற்குரியவர்கள் என்று கருதப்படுவோரும், தடைசெய்யப்பட்ட பொருள்களை கடத்திச் செல்வதற்கு முயற்சிப்போரும் கைது செய்யப்பட்டு இதில் அடைக்கப்படுகின்றனர்.

நாளாந்தம் சுமார் இருபது பேர் இவ்வாறு கைது செய்யப்பட்டு அடைக்கப்படுகின்றனர். விசாரணையின் பின்னர் வவுனியா பிரதான இராணுவ முகாமிற்கு இடமாற்றம் செய்யப்படுகின்றனர் (தி)

# ஆசிய பசுபிக் பகுதிகளை அமெரிக்கா கைவிடாது -ஜோர்ஜ் புஷ்

(சிங்கப்பூர்)

கெடுபிடி யுத்தம் முடிவடைந்துள்ள போதிலும் ஆசிய பசுபிக்பிராந்தியங்களில் தனக்குள்ள விசேட பொறுப்பை அமெரிக்கா கைவிடாது என அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் கூறியுள்ளார்.

அவுஸ்திரேலிய விஜயத்தை முடித்துக்கொண்டு தற்சமயம் சிங்கப்பூர் வந்துள்ள அதிபர் புஷ், அங்கிருந்து ஜப்பானுக்கும் செல்லவுள்ளார்.

சிங்கப்பூரில் தங்கியிருக்கும் போது சிங்கப்பூர் தலைவர்களுடன் கடற்படை வசதிகளைப் பெருக்கிக் கொள்வது பற்றியும், தென் கிழக்காசிய நாடுகளுடன் வர்த்தகத் தொடர்புகளை விஸ்தரிப்பது பற்றியும் அதிபர் புஷ் பேச்சு நடத்துவார்.

மேலும் பிலிப்பைன்சிலுள்ள ஆயிக் கடற்படைத் தளத்தை சிங்கப்பூருக்கு மாற்றவும் ஜோர்ஜ் புஷ் திட்டமிட்டிருப்பதாக அமெரிக்க அதிகாரிகள் கூறியுள்ளனர்.

# சந்திப்பு இரண்டு தினங்கள்

(யாழ்ப்பாணம்)

வேலை நாட்களில் இரு நாட்கள் மட்டுமே யாழ். செயலக திட்டப்பணிப்பாளரை பொதுமக்கள் சந்திக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரைகாலமும் புனர்வாழ்வுப் பகுதி அதிகாரியை பொதுமக்கள் தினமும் சந்தித்து வந்தனர். ஆனால் வெள்ளி முதல் திங்கள், புதன் ஆகிய இருதினங்கள் மட்டுமே பொது மக்களைச் சந்திக்க திட்டப்பணிப்பாளர் விரும்புகிறார் என எழுதப்பட்ட ஓர் மட்டை அவர் வாயிலில் தொங்க விடப்பட்டுள்ளது.

# பயிலுநர் ஆசிரியர் கலை விழா

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனமும் போருட் நிறுவனமும் இணைந்து நடாத்தும் சிறுவர் பாடசாலை பாலர் கல்வி பயிலுநர் ஆசிரியரின் கலை விழா இன்று 5 ஆம் திகதி (5-1-92) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தின் தலைவர் திரு இ. தவயோகராஜா தலைமையில் நடைபெறும்.

## மருத்துவ

மருத்துவ பீடத்திற்கு தேவையான வசதிகள் பல அங்கு இல்லையென்றும், இங்கு மாணவர்கள் கல்விகற்பதில் பல இடையூறுகள் இருக்கின்றதெனவும் காரணங்கள் காட்டி மருத்துவ பீடத்தை வடபகுதிக்கு வெளியே மாற்ற தாம் முடிவு செய்ததாக பல்கலைக்கழகங்களின் மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது, தமிழ் மக்களின் கல்வி மீது அரசியல் சாயம் பூசி அதை தமது அரசியல் இலாபங்களுக்காக பயன்படுத்த சிறிலங்கா அரசு முனைந்து நிற்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

## பயிற்சி முடிந்த

இவர்கள் மாற்றலாகியுள்ளனர்கள். இப் பாடசாலைகள் அமைந்திருக்கும் தீவகங்கள் இராணுவ ஆக்கிரமிப்புக்கு உட்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

**மேலும் இப் பாடசாலைகளில் கடமையை ஏற்றுக்கொண்டது தொடர்பாக கோட்டக் கல்விப் பிரதிப் பணிப்பாளருக்கும் கல்வித் திணைக்கள சம்பளக் கிளைக்கும் தனித்தனிக் கடிதங்கள் மூலம் அறிவிக்கும் படியும் யாழ். கல்வித் திணைக்களத்தினால் பணிக்கப்பட்டுள்ளார்கள்.**

## புலிகளுடன்

உத்தேச முன்னணி இந்து அடிப்படைவாதம், பொலிஸ் மற்றும் இராணுவ அடக்குமுறை, அரச பயங்கரவாதம் ஆகியவற்றிற்கு எதிராகப் போராடும் என்று ஏ.பி. எவ் செய்தி தெரிவிக்கின்றது.

பெப்ரவரி 15 இல் மத்திய அரசுநடத்தவிருக்கும் பஞ்சாப் தேர்தலைஐ.நா.மேற்பார்வை செய்தால்தான் தனது கட்சி தேர்தலில் போட்டியிடும் என்றும் அவர் கூறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## காப்புறுதி

காக அவற்றை காப்புறுதி செய்ய காப்புறுதிக் கூட்டுத் தாபனம் மறுத்துவிடுகின்றது. காப்புறுதி செய்யப்படாத வங்கிகளில் அதிகளவு பணத்தை வைத்திருக்க வேண்டாம் என்று வங்கித்தலைமை அலுவலகம் சுற்றுநிருபம் ஒன்றை வடபகுதி வங்கிகளுக்கு அனுப்பிவைத்திருக்கின்றது.

தற்போதையவடபகுதி வங்கிகளின் செயற்பாடு பற்றி கொழும்பில் தங்கி இருக்கும் அரச அதிபர் திரு. மாணிக்கவாசகர் நிதி அமைச்சின் செயலாளருடன் பேசிவருகிறார்.

**மக்கள்வங்கி குறிப்பிட்ட எல்லைவரை பணக்கொடுக்கல் வாங்கலை மேற்கொள்ள முடியும் என்று ஏற்கனவே மட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. அதேபோல இலங்கை வங்கிக்கும் குறிப்பிட்டவரையறை செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (க)**

## இருநூறு

புதிய மகசீன் சிறையிலிருப்போர் சுதந்திரக்கட்சி எம்.பி. மஹிந்தராஜபக்ஷவுக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் தமக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே எந்தத் தொடர்பும் இல்லை எனக் கூறியிருப்பதுடன் தம்மை ஜாலத்துழுவிற்கு முன் நிறுத்துமாறும் கோரியுள்ளனர். இவர்களைவிட மேலும் முந்நூறு தமிழர்கள் களுத்துறைப் பகுதி முகாமில்தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

## புலிகளை

**புலிகளுடன் பேச்சுவார்த்தைக்கு அவரை அனுப்புவது புத்திசாலித்தனமான செயலல்ல. இவ்வாறு மாத்தறை பிக்குகள் சங்கம் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு அனுப்பி வைத்த கடிதத்தில் தெரிவித்துள்ளது.**

அமைச்சர் தொண்டமான் சில தீர்வுகளை எடுத்துக்கொண்டு புலிகளுடன் பேச்சுவார்த்தைக்காகச் செல்லமுன் வந்துள்ளமை இனத்துவேச சாம்பலைக் கிளறிவிடும் செயலைப் போன்றது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாராமுக இராஜதந்திரம் விளைவுகளை விபரீதமாக்கும்


## மத்திய அரசுமீது கருணாநிதி கண்டனம்

ஒருபுறம் ஒருமைப்பாடு- ஒற்றுமை, உபதேசம்; இன்னொருபுறம் அவற்றுக்கு நேர்விரோதமான செயல்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அல்லது பாராமுகமாக இருக்கும் ராஜ தந்திரம் இந்தவேடம் நீண்டநாள் நிலைக்காது. தமிழர்களின் வேதனை பெருகப் பெருக விளைவுகள் விபரீதமாகும். இவ்வாறு கர்நாடக தாக்குதல் குறித்து தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கன்னட மக்களும் தமிழர்களும் ஒருவரோடு ஒருவர் மோதிக் கொள்வது போல் ஒரு கற்பனையைச் செய்துகொண்டு ஒற்றுமை ஒற்றுமை என்னும் உபதேச அரசியல் வேறு நடத்தப்படுகிறது.

இன்னும் தமிழ்நாட்டு மக்கள் கர்நாடகத்தில் நடப்பது போல இங்குள்ள கன்னட மொழிக்காரர்களை நடத்த முனையவுமில்லை அந்த எண்ணம் தமிழக மக்களுக்கு இல்லை எனினும் அடிபடும்போது அடியைத் தாங்கிக் கொள்ள அவர்களை அறியாமல் கையால் தடுப்பது கூட குற்றம் என்று எவர் கூறினும் அது ஏற்கக் கூடியதல்ல.

இனி அந்தந்த மாநிலத்தில் அந்தந்த மொழியை தாய் மொழியாகக் கொண்டவர்களுக்குத் தான் இடம் என்று முடிவுக்கு வந்து விட்டோமா? அதையாவது மத்திய அரசும், கர்நாடக மாநில அரசும் வெளிப்படையாக சொன்னால் நல்லது என்று அவ்வறிக்கை தெரிவிக்கிறது.




## ஆண்கள் சிலர் விடுதலை; பெண்கள் தடுத்து வைப்பு

ஊவா மாகாணத்தில் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களில் 26 ஆண்கள் விசாரணையின் பின் விடுதலை செய்யப்பட்டனர்.

ஆனால் கைது செய்து தடுத்து வைக்கப்பட்ட பெண்கள் ஒருவரும் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை எனத் தெரிய வருகின்றது.

கடந்த இருமாதங்களில் 5 பெண்கள் உட்பட 60 பேர் கைது செய்யப்பட்டனர்.

## அவசர கூட்டம்

தொண்டர் ஆசிரியர் சங்க அவசர நடவடிக்கைக் கூட்டம் 7ம் திகதி செவ்வாய் காலை 10.30 மணிக்கு ஸ்ரான்லி வீதி பட்டப்படிப்புகள் கல்லூரியில் நடைபெறும் அனைத்து தொண்டர் ஆசிரியர்களும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## 'நித்திலா' கல்விக்கூடம் நாளை ஆரம்பம்

அரியாலை கிழக்கு பிரதேசத்தில் உள்ள சிறார்களின் கல்விவளர்ச்சி சருதி, சமூக பொருளாதார வளர்ச்சிதிட்ட பிரிவினரால் பூம்புகார் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள நித்திலா பாலர்கல்விக்கூடம்நாளைஆரம்பமாகஉள்ளது.

ஆண்டு 1முதல் ஆண்டு 5வரையான மாணவர்களுக்கு தற்பொழுது இங்கு கல்விபயிலவசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வளவுகாலமும் இப்பகுதி மாணவர்கள் நெடுந்தூரம் சென்று கல்வி பயிலவேண்டி இருந்தமையாலும் போக்கு வரத்து வசதிகள் இல்லாமையாலும் கல்வி கற்பதில் பெரும்சிரமங்களை எதிர் நோக்கி வந்தனர்.

மிகவிரைவில் இக்கல்விக் கூடத்தில் ஏனைய வகுப்புக்களும் ஆரம்பிக்கப்பட்டு ஏனைய மாணவர்களும் சிரமமின்றி தமது பிரதேசத்திலேயே கல்வி பயிலக்கூடிய வாய்ப்பு ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன.

## புலிகளை இதுவரை தொண்டாகண்டித்ததில்லை

### - பௌத்த சங்கம் கவலை

(மாத்தறை)

கடந்த காலங்களில் இந்த நாட்டில் ஏற்பட்ட சம்பவங்கள் தொடர்பாக ஏற்பட்ட விளைவுகளை நீங்கள் அறிவீர்கள். ஆரம்பம் முதல் அமைச்சர் தொண்டமான் புலிகளையோ, இவ்விடயத்தில் தென்இந்தியா கையாண்டு வந்த செயற்பாடுகளையிட்டோ எதிராக ஏதாவதொரு வசனம் பேசினாரா என்று எமக்குத் தெரியாது.

எனவே தொண்டமானின் ஆலோசனையை முன்வைத்து

(3ஆம் பக்கம் பார்க்க)

## கலந்துரையாடல்

யாழ். மாவட்டத்திலுள்ள சகல கிராமிய உற்பத்திக் குழுக்களின் தலைவர்கள், செயலாளர்கள் கலந்து கொள்ளும் மாதாந்தக் கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 2.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அனைவரையும் தவறாது சமுகமளிக்கும் படி கேட்கப்பட்டுள்ளனர்.

## தெ. கிழக்காசியாவிலிருந்து புலிகளுக்கு ஆயுதமாம்

(டில்லி)

விடுதலைப் புலிகளுக்குத் தென்கிழக்காசிய நாடுகளில் இருந்து அநேகமான ஆயுதங்கள் கிடைப்பதாக இந்தியப் புலனாய்வுத் துறை தெரிவித்துள்ளது.

புலிகளின் ஆதரவாளர்களையும் உதவுவோரையும் கண்டு பிடிக்க உதவுமாறு ஜேர்மன், பிரான்ஸ், சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளின் பொலிஸாரிடம் இந்தியப் புலனாய்வுத் துறையினர் கேட்டுள்ளனர்.

### தொண்டா முயற்சியை

யின் சிங்கள சேவை கணிப்பிட்டுள்ளது. எனினும் அவர் இதற்கான முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபட்டுள்ளார் எனக் கூறப்படுகிறது.

சிலர் குறுகிய அரசியல் லாபம் தேடும்நோக்குடன் இனவாதத் தீயை எரிய விட்டாலும் அது மக்கள் மத்தியில் அவ்வளவாக எடுபடவில்லையெனத் தெரியவருகிறது என பி.பி.சி நேற்றிரவு கூறியது.

அதில் மேலும் கூறப்பட்டதாவது 'வடக்கு, கிழக்கு யுத்தத்தினால் வருடாந்தம் இரண்டாயிரத்து ஐந்நூறு கோடி ரூபா இராணுவ செலவுக்கு ஒதுக்கீடுசெய்ய வேண்டியிருக்கிறது. இந்த மீண்டெழும் செலவினத்திலிருந்து விடுபடுவதற்கு பேச்சுவார்த்தைமூலம் ஒரு சமாதான தீர்வு அவசியம். அத்துடன் வடக்கு, கிழக்குப் பிரச்சினையை யுத்தத்தினால் வெற்றி கொள்ளமுடியாது. எனவே பேச்சுவார்த்தை மூலமே வெற்றிபெறமுடியும் என்றும் தவிர இராணுவ பலத்தால் இல்லை எனவும் விசேடமாக விடுதலைப் புலிகளுடன் பேசியே சமாதானத்தை ஏற்படுத்த முடியுமெனவும் கூறியது.

மேலும் லலித் குழுவினர் தொண்டாவின் திட்டம் ஜனாதிபதியின் திட்டம் என்றும் தொண்டமானையும், விடுதலைப் புலிகளையும் பயன்படுத்தி வரும் ஜனாதிபதி தேர்தலைச் சந்திக்க பிரேமதாசா முயல்கின்றார் என கூறி வருவதாகவும் தெரிந்தது.

### வடபகுதி வங்கிகள்

## காப்புறுதி இல்லை; மட்டுப்படுத்தப்பட்ட சேவை

வடபகுதி அரசவங்கிகள் காப்புறுதி செய்யப்படாமையால் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இவற்றின் சேவைகள் நடைபெற்று வருகின்றன.

வங்கிகளில் பணம் கையாளுதல், சேமித்துவைத்தல் ஆகிய செயற்பாடுகள் நடைபெறுவதனால் இவற்றை காப்புறுதி செய்வது வழமை. ஆனால் வடபகுதியில் இயங்கும் வங்கிகளில் பொலிஸ் பாதுகாப்பு இல்லை என்ற காரணத்திற்

(3ஆம் பக்கம் பார்க்க)

### இனப் பிரச்சினை

யாது. புலிகள் தோற்கடிக்கப்பட்டாலும் கூட அதன் பின்னரும் அவர்களுடன் பேச்சு நடத்தித்தான் அரசியல் சமாதானத்தை நிலை நாட்ட முடியும். எனவே முன்னர் தவறவிடப்பட்ட பல சந்தர்ப்பங்களைப்போல இதுவும் தவறவிடப்படலாகாது எனவும் தொண்டமான் முன்வைத்துள்ள தீர்வுத் திட்டம் பேச்சுக்களுக்கான அடிப்படையாக அமைய முடியுமெனவும் தெரிவித்துள்ளார்.

### படுவான்கரையில்

நேற்று முன்தினம் நண்பகல் கொக்கட்டிச்சோலை இராணுவ முகாமிலிருந்து மண்முனைத்துறைக்கு ரோந்து செல்லமுற்பட்ட இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற் கொள்ளத் தயாராக இருந்தனர். இதனை அறிந்த சிறிலங்கா இராணுவத்தினர் ஆரையம்பதி இராணுவ முகாமிலிருந்தும் கொக்கட்டிச்சோலை முகாமிலிருந்தும் வெளியேறி விடுதலைப் புலிகளை மடக்க முற்பட்டபோது இம் மோதல் இடம்பெற்றது.

சுமார் ஒன்றரை மணிநேரம் நடைபெற்ற உக்கிர தாக்குதலின் போது இரு படையினரும் மூன்று ரெலோ உறுப்பினர்களும் கொல்லப்பட்டனர்.

இம் மோதல் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது மகிழடித்தீவு முகாமிலிருந்து வெளியேற முற்பட்ட இராணுவத்தினர் மீதும் புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர். இவர்களுக்கு ஏற்பட்டசேதவிபரம் தெரியவில்லை இதன் போதுஹெலி ஒன்று இப்பகுதியில் கலிபர் தாக்குதலை நடாத்தியது.

மேற்படிதாக்குதலின் போது ரி56- 2ரகதுப்பாக்கி 01, ரி56- 1 ரகதுப்பாக்கி 01, இதன் மகசீன் 06, ஐ. எம். ரவை - 160, சப்பாத்து ஒரு சோடி, கோல்சர்-01 ஆகியவை விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

### வீரச்சாவு

பட்ட மோதலில் மேஜர் வினோத் (முருகேசு அசோகன் கொக்கட்டிச்சோலை) வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

திருக்கோணமலை மாவட்டத்தில் நேற்று பிற்பகல் தவறுதலாக மிதிவெடி ஒன்று வெடித்தமையினால் லெப். சக்தி (கனகசிங்கம், சிறிஸ்கந்தராசா, கோவையூர் மூதூர்) என்பவர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டம் சந்தி வெளிப் பகுதியில் கடந்த முதல் தேதியன்று முன்னேறி வந்த சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலின்போது நவா, சூரி, மகேஸ் ஆகியோர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளனர்.

இவர்கள் ஐவருக்கும் விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### 21-ஆம்

இம்மாதம் 10, 21 ஆம் திகதிகளில் கூடுகிறது. 21 ஆம் திகதிக்குப் பின்னர் யழ். செல்லக்கூடிய நிலைமை ஏற்படும்.

யாரும் எனது ஆலோசனையைஎதிர்க்கலாம். ஆனால் மாற்றுயோசனைகளை எவரும் தெரிவிப்பதாக இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில் நான் யாழ்ப்பாணம் செல்ல வேண்டுமென விரும்புவது ஏனெனில் நான் முன்வைத்துள்ள திட்டம் எதிர்காலப் பேச்சுக்களுக்கான அடிப்படையாக அமையக் கூடியதென்ற உறுதிமொழியை விடுதலைப் புலிகளிடம் இருந்து பெற வேண்டும் என்பதற்காகவே எனக் குறிப்பிட்டார்.

1992 ஆம் ஆண்டிற்கான புதிய வகுப்புக்கள் யாவும்
தை 5 முதல்
யூனிவேர்சல்
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(சி/3723)

இப்புத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.